Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா: 5-00

நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மாசி 30 | [13 - 3 - 1993] | சனிக்கிழமை | ஓசை 23

## புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளி மாற்றம் எதுவுமில்லை

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட ஆண்டு -5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் வெட்டுப்புள்ளி எக்காரணம் கொண்டும் மாற்றி அமைக்கப்பட மாட்டாது என யாழ். கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கல்வி அமைச்சினால் கொழும்பிலிருந்து சரியான வெட்டுப்புள்ளி அறிவிக்கப்படும் வரை தற்போது அறிவிக்கப்பட்டுள்ள வெட்டுப்புள்ளியில் (150) எதுவித மாற்றமும் செய்யப்பட மாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார். யாழ். கல்வித்திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள இவ் வெட்டுப்புள்ளியை ஆட்சேபித்து பெற்றோர்கள் 1992 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் வெட்டுப்புள்ளியாகிய 136 ஐஇம் முறையும்நிர்ணயிக்கும்படி கோரியபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (4 ம் பக்கம் பார்க்க)

# பம்பாய் கேந்திர நிலையங்களில் பாரிய குண்டு வெடிப்பு சம்பவங்கள்

## 200 பேர் பலி; 1000பேர் படுகாயம்

[பம்பாய்]

இந்தியாவின் பிரதான நகரங்களில் ஒன்றான பம்பாய் நகரில் நேற்றுப்பிற்பகல் இடம் பெற்ற தொடர்ச்சியான குண்டு வெடிப்பால் இருநூறிற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாகவும், 1000 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்ததாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன. மிக முக்கியமான நகரின் வர்த்தகமையத்தில் ஒன்றன்பின் ஒன்றாக பதின்நான்கு குண்டுகள் வெடித்ததாகவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

நேற்று மாலை 1.45 மணியளவில், பம்பாய் நகரின் நரிமன் பொயின்ட் பகுதியில் இருக்கும் பங்குச் சந்தைப் பகுதியிலுள்ள 24 மாடிக்கட்டடத்தில் முதலாவது குண்டு வெடித்தது. இக் கட்டடத்தில் இருந்து மட்டும் சுமார் 50 சடலங்கள் மீட்கப்பட்டதாகவும், இக் கட்டடத்திலிருந்து பலரும் முண்டியடித்துக் கொண்டு இறங்கியதினால் பலர் பலத்த காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பம்பாய் நகரில் இடம் பெற்றஇப்பதின்நான்கு குண்டு வெடிப்புகளும் நான்கு மணி நேரத்திற்குள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதில், பஸ்வண்டி ஒன்றில் வெடித்த குண்டினால் 38 பேர் கொல்லப்பட்டதாகவும், ரயிலில் வெடித்த குண்டொன்றினால் பலர் கொல்லப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், இறந்தவர்களின் தொகை இதைவிட அதிகமெனவும் துப்புரவு வேலைகள் தொடர்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## 24 மாடிக்கட்டட தொகுதி குண்டுவெடிப்பால் நாசம்

பம்பாய் பங்குச்சந்தையின் 24 மாடிக் கட்டடத்தின் அடித்தளத்திலுள்ள பாங்க் ஒப் பரோடா அலுவலகத்திலேயே மிகச் சக்திவாய்ந்த குண்டு நேற்று வெடித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இக் குண்டு வெடிப்பினால் பக்கத்திலிருந்த பல கட்டடங்களும் சேதமடைந்தன.

ஒரு மணி நேரத்திற்குள்ளாக பம்பாய் நகரத்தின் தென் கோடி முனையிலிருந்து வடக்கு முனைவரை சங்கிலித் தொடரான குண்டு வெடிப்புகள் பம்பாய் நகரையே அதிரவைத்ததாகவும், பம்பாயிலுள்ள ஏயர் இந்தியா கட்டடம், மனோஸ் மாக்கற், சிவாஜி பார்க், மன்ஜின பன்டார், செஞ்சுரி பஜார், சென்ரல் ஹொட்டேல், ஞாயிர் மருத்துவமனை, ஜோகர் மருத்துவமனை, பம்பாய் ... கழகம், மத்திய பம்பாயிலுள்ள பேருந்துநிலயம், நியூ பசார் ஆகிய இடங்களில் குண்டுகள் வெடித்ததெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் தொடர் குண்டு வெடிப்புகளை அடுத்து மக்கள் இங்கும் அங்குமாக ஓடினர். 30க்கு மேற்பட்ட கார்கள் இக் குண்டு வெடிப்பினால் சேதமடைந்ததாகவும் தகவல்கள் தெரி...

## வீரச்சாவு

### துணைப்படை வீரர் வீரவேங்கை சீமான்

நேற்று முன்தினமிரவு இளாலி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் துணைப்படை வீரர் வீரவேங்கை சீமான் [இலுப்பைக்கடவை, மன்னார்] வீரச்சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

தொழிற்சாலையில் பணிபுரிந்த

## 6 தமிழ் இளைஞர்கள் எக்கலப் பகுதியில் கைது

எக்கலப் பகுதியில் பிளாஸ்டிக் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்துவந்த ஆறு தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணைக்காக இவர்கள் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

## இளவாலை கிணற்றிலிருந்து ஏழு எலும்புக்கூடுகள் மீட்பு

இளவாலைப் பகுதியில் பாழடைந்த நிலையில் உள்ள கிணறு ஒன்றில் ஏழு மனித எலும்புக் கூடுகள் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 25 தொடக்கம் 35 வயதிற்கு உட்பட்டவர்களின் எலும்புக் கூடுகள் என சந்தேகிக்கப்படும் இவை மேற்படி பகுதி இராணுவத்தினால் சுற்றி வளைக்கப்பட்ட போது சிக்குண்டு இறந்த பொதுமக்களினுடையதாக இருக்கலாமென்றும் இவர்களின் விபரம் பற்றி எதுவும் பெறமுடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வலிவடக்கு இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் அகப்பட்டுள்ள 30 வயது மதிக்கத்தக்க பட்டதாரி இளைஞர் ஒருவர் இராணுவத்தினரின் தேடுதலின் போது கடுமையாகத் தாக்கப்பட்டு இராணுவ முகாமிற்குகொண்டு செல்லப்பட்டிருந்தார். என்று கிறிஸ்தவ மதகுரு ஒருவர் எடுத்த முயற்சியை அடுத்து அவர் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டார் எனவும்தெரிவிக்கப்பட்டது. (நி)

## பாராளுமன்ற தெரிவுக்குழு 26ஆம் திகதி கூடுகிறது

பாராளுமன்ற தெரிவுக்குழு மீண்டும் எதிர்வரும் 26 ஆம் திகதி கூடுகின்றது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய யோச... அறிக்கையை வெளியிட்டமையும், அதை கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் நிராகரித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்...

## மீட்புநிதி சேகரிப்பு

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் 10.00 மணிவரை நல்லூர்மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர் தமது மீட்புநிதிக் கடனை இக் குறித்த நேரத்தில் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## சூரியகாந்தி விதை

நடுகைக்கு உகந்த தரமான சூரியகாந்தி விதைகள் விற்ப...
(4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பயணிகள் மீது படையினர் தாக்குதல்

மட்டக்களப்பு அம்பாறைப் பகுதியில் பேருந்துகளில் பயணம் செய்யும் தமிழ் மக்கள் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதாகத் தெரியவருகின்றது.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள பகுதிகளில் இருக்கும் சோதனைச் சாவடிகளில் வைத்தும், சிவிலுடையில் பேருந்துகளில் பயணம் செய்யும் படையினராலும் தமிழர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

## 12 இந்திய மீனவர்கள் ...

கிணறு ஒன்றில் ஏழு மனித எலும்புக் கூடுகள் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 25 தொடக்கம் 35 வயதிற்கு உட்பட்டவர்களின் எலும்புக் கூடுகள் என சந்தேகிக்கப்படும் இவை மேற்படி பகுதி இராணுவத்தினால் சுற்றி வளைக்கப்பட்ட போது சிக்குண்டு இறந்த பொதுமக்களினுடையதாக இருக்கலாமென்றும் இவர்களின் விபரம் பற்றி எதுவும் பெறமுடியாமல்

இதேவேளை ... இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் அகப்பட்டுள்ள 30 வயது மதிக்கத்தக்க பட்டதாரி இளைஞர் ஒருவர் இராணுவத்தினரின் தேடுதலின் போது கடுமையாகத் தாக்கப்பட்டு இராணுவ முகாமிற்குகொண்டு செல்லப்பட்டிருந்தார் என்று கிறிஸ்தவ மதகுரு ஒருவர் எடுத்த முயற்சியை அடுத்து அவர் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டார் எனவும்தெரிவிக்கப்பட்டது. (நி)

# பாராளுமன்ற தெரிவுக்குழு 26ஆம் திகதி கூடுகிறது

பாராளுமன்ற தெரிவுக்குழு மீண்டும் எதிர்வரும் 26 ஆம் திகதி கூடுகின்றது. சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய யோசனைகளை பரிசீலிக்கும் பொருட்டே குழு மீண்டும் கூடுவதாக தெரிவுக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

மூன்று மாத இடைவெளியின் பின் நேற்று முன்தினம் கூடிய பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது இடைக்கால அறிக்கையை வெளியிட்டமையும், அதை கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் நிராகரித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தெரிவுக்குழு கூட்டங்களில் இனி கலந்துகொள்வதில்லை என ஏழு தமிழ் கட்சிகளும் அறிவித்துள்ள நிலையில் எதிர்வரும் 26 ஆம் திகதி பாராளுமன்றத் தெரிவுக்குழு கூடுகின்றது.

# சீரான உணவு விநியோகம்; கொழும்பில் பேச்சுவார்த்தை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேற்படி நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதற்காக யாழ். செயலக திட்டபணிப்பாளர் திரு. பத்மநாதன் கொழும்பு விரையவுள்ளார்.

கொழும்பில் இருந்தும் திருக்கோணமலையில் இருந்தும் கப்பல்மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்களை குடாநாட்டுக்கு எடுத்துவரும் செயற்பாடுகள் அண்மைக்காலமாக சீரற்ற வேகத்தில் நடைபெற்று வருகிறது. இதனால் குறிப்பிட்ட ஒரு காலத்தில் குடாநாட்டில் உணவுப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# நெசவு மூலப்பொருளுடன் 2 தினங்களில் கப்பல்

(யாழ்ப்பாணம்)

வாதுவ கப்பலில் நெசவுத் தொழிலுக்கான மூலப் பொருள்களும் வருகின்றதென தெரிய வருகின்றது

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: நெசவு நூல், கோஸ்ரிக் சோடா மற்றும் இதற்குப் பயன்படுத்தும் இரசாயன பொருள்கள் போன்றன கொழும்புத் துறைமுகத்தில் வைத்து வாதுவ கப்பலில் ஏற்றப்பட்டுள்ளதாகவும் இக் கப்பலில் வரும் மற்றைய பொருள்கள் பற்றி இன்னமும் தகவல் வரவில்லையெனவும் யாழ். அரச அதிபர் தெரிவித்தார். அநேகமாக இக் கப்பல் இன்னும் இரண்டொரு நாட்களில் வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை அடுத்த தொகுதி மண்ணெண்ணெய்யை ஏற்றிக்கொண்டு இன்னும் 10 நாட்களுக்குள் நில்கிரி வருமென செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்தனர். (சி)

உளவாளிகள் !!!

அவதானமாக இருக்கவும்...!

எங்களில் ஒருவராக ஊருக்குள் அலைவார்கள்

எங்களின் தேவைகளை ஊக்கத்துடன் செய்வார்கள்.

# 24 மாடிக்கட்டட தொகுதி குண்டுவெடிப்பால் நாசம்

பம்பாய் பங்குச்சந்தையின் 24 மாடிக் கட்டடத்தின் அடித்தளத்திலுள்ள பாங்க் ஒப் பரோடா அலுவலகத்திலேயே மிகச் சக்திவாய்ந்த குண்டு நேற்று வெடித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இக் குண்டு வெடிப்பினால் பக்கத்திலிருந்த பல கட்டடங்களும் சேதமடைந்தன.

ஒரு மணி நேரத்திற்குள்ளாக பம்பாய் நகரத்தின் தென் கோடி முனையிலிருந்து வடக்கு முனைவரை சங்கிலித் தொடரான குண்டு வெடிப்புகள் பம்பாய் நகரையே அதிரவைத்ததாகவும், பம்பாயிலுள்ள ஏயர் இந்தியா கட்டடம், மனோஸ் மாக்கற், சிவாஜி பார்க், மன்ஜின பண்டார், செஞ்சுரி பஜார், சென்ரல் ஹொட்டேல், ஞாயிர் மருத்துவமனை, ஜோகர் மருத்துவமனை, பம்பாய் பல்கலைக் கழகம், மத்திய பம்பாயிலுள்ள பேருந்துநிலயம், நியூ பசார் ஆகிய இடங்களில் குண்டுகள் வெடித்ததெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக் தொடர் குண்டு வெடிப்புகளை அடுத்து மக்கள் இங்கும் அங்குமாக ஓடினர். 30க்கு மேற்பட்ட கார்கள் இக் குண்டு வெடிப்பினால் சேதமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பாகிஸ்தான் மீது இந்தியா மறைமுகக் குற்றச்சாட்டு

பம்பாய் நகரில் நேற்று மாலையில் ஏற்பட்ட குண்டு வெடிப்புக்களின் பின்னணியில் சர்வதேச சதி நாசகார சக்திகளின் தொடர்பு இருக்கலாம் என்று தான் கருதுவதாக மத்திய உள்துறை அமைச்சர் எஸ் பி. சவான் பாராளுமன்றத்தில் நேற்று பேசும்போது குறிப்பிட்டார்.

உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் இவ்வாறுசர்வதேச நாசகார சக்திகள் என மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தது பாகிஸ்தானையே என பி.பி. ஸி. தெரிவிக்கின்றது

அத்தோடு பயன்படுத்தப் பட்ட குண்டுகள் வெளிநாடுகளில் தயாரிக்கப்பட்டவை எனவும், உள்ளூரில் இக் குண்டுகள் பாவனையில் இல்லாதவை எனவும் சவான் தெரிவித்தார்.

தீவிர வாத சக்திகளின் நாசகார செயல்கள் குறித்து விழிப்பாக இருக்கும்படி மாநில முதலமைச்சர் ஷரத்பவாரிடம் தான் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் சவான் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்திய அரசிற்கு பெரும் அதிர்ச்சி

பம்பாயில் நேற்று ஏற்பட்ட தொடர் குண்டு வெடிப்பு இந்திய அரசியல் வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக பி.பி.ஸி தெரிவித்தது. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைக்கு இதுஒருபாரியபின்னடைவுஎன்றும், மதக் கலவரத்திலிருந்து மீண்டுகொண்டிருந்த பம்பாயில், புதிய முதலமைச்சராக சரத்பவார் பதவியேற்ற சில தினங்களில் இக்குண்டுவெடிப்பு ஏற்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# கொங்கராசன் குளத்தில் புதிய ராணுவ காப்பரண்

(யாழ்பாணம்)

வவுனியா மாவட்டத்தில் உள்ள கொங்கராசன்குளம் என்னும் இடத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் காப்பரண்களை அமைத்து வருகின்றனர்.

செட்டிகுளம் - சின்னக்குளம் என்னுமிடத்தில் இருந்து சுமார் 3 மைல்வரை முன்னேறிய படையினரே மேற்படி பகுதியில் தரித்து நின்று இந் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

கிளாலி - பூநகரி

# படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் யோ. தமிழ்க் குமரன் அறிவித்துள்ளார்.

ஆனாலும், இறந்தவர்களின் தொகை இதைவிட அதிகமெனவும் துப்புரவு வேலைகள் தொடர்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# விதை

நடுகைக்கு உகந்த தரமான சூரியகாந்தி விதைகள் விற்ப

(4ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் பயணிகள் மீது படையினர் தாக்குதல்

மட்டக்களப்பு அம்பாறைப் பகுதியில் பேருந்துகளில் பயணம் செய்யும் தமிழ் மக்கள் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகும் சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுவதாகத் தெரிய வருகின்றது.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள பகுதிகளில் இருக்கும் சோதனைச் சாவடிகளில் வைத்தும், சிவிலுடையில் பேருந்துகளில் பயணம் செய்யும் படையினராலும் தமிழர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

# 12 இந்திய மீனவர்கள் புலிகளால் விடுவிப்பு

(முல்லைத்தீவு)

தமிழீழக் கடற்பரப்பில் திசைமாறித் தத்தளித்த 12 தமிழக மீனவர்களையும் காப்பாற்றிய விடுதலைப் புலிகள் அவர்களை மனிதாபிமான அடிப்படையில் கடந்த புதன்கிழமை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர்.

கடந்த 25 ஆம் திகதி முல்லைத்தீவுக் கடற்பரப்பில் திசைமாறித் தத்தளித்துக் கொண்டிருந்த இம் மீனவர்களை விடுதலைப் புலிகள் காப்பாற்றி பாதுகாப்பில் வைத்திருந்தனர்.

தற்போது இம் மீனவர்களின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்குமிடையில் ஏற்பட்ட உடன்பாட்டைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை மாலை 4 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி மரியானா ஹாரடாப்பியிடம் விடுதலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அகதிகளுக்கான ஐ. நா.

# முக்கிய முடிவுகளை விரைவில் அறிவிக்குமாம்

சங்குப்பிட்டி-பூநகரி பாதை தொடர்பாக ஒரு முக்கிய செய்தி; அகதிகளுக்கான ஐ. நா. உயர்தானிகராலயத்தால் வெளியிட இருப்பதாக கொழும்பு அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஏ. எவ். பி. நிறுவனம் செய்தி வெளியிட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். வைத்தியசாலை இருளில் மூழ்கும் அபாயம்

யாழ். போதனா வைத்திய சாலையில் பழுதடைந்த 15 கிலோவாற் மின்பிறப்பாக்கி இயந்திரம் திருத்துவதில் ஏற்பட்டுள்ளதாமதத்தால்வைத்தியசாலைஇருளில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இம்மின்வழங்கியின் முக்கிய உதிரிப்பாகம் ஒன்றுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இயந்திரத்தைத்திருத்துவதில் தாமதத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இப்போது பாவனையில் உள்ள 35கிலோவாற், 15 கிலோவாற் மின்பிறப்பாக்கிகளில் ஏதாவது ஒன்று பழுதடைந்தால்வைத்தியசாலைக்கு மின்வழங்குவதில் பெரும் சிரமமேற்படுமென வைத்தியசாலை மின் நிலையத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை திருத்துவதற்காக கொழும்புக்கு அனுப்பப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் மனித உரிமை மீறல் ஜெனிவாவில் குற்றச்சாட்டு

பிரட்மன் வீரக்கோன் தகவல்

சிறிலங்காவில் தொடர்ந்தும் காணமல் போனவர் தொடர்பாகவும், மனிதஉரிமை மீறல் தொடர்பாகவும் ஜெனிவா மாநாட்டில் கவலை தெரிவிக்கப்படுவதாக ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன்வீரக்கோன் தெரிவித்தார்.

மனிதஉரிமைமீறல் தொடர்பாக குற்றம் இழைத்த பாதுகாப்பு படையினருக்கும், பொலீஸ் உத்தியோகஸ்தருக்கும்எதிராகவிசாரணையை தீவிரப்படுத்தவேண்டும் என்றும், இவர்கள்மீது சிவில் நீதிமன்றம் விசாரணை நடத்த வேண்டும் என்றும் மாநாட்டில் வற்புறுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## வரி விளம்பரம்

### ஸ்ரீ லங்கா அச்சகம்

(புத்தகசாலையல்ல)

ஸ்ரீ காந்தா அச்சக லேன்-ராஜா தியேட்டர் அருகாமை தனது சொந்த இடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறதென்பதை அன்பான மக்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கின்றோம். 234 , காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்.
(4457)

### தவறிவிட்டது

வேலுப்பிள்ளை இராசேஸ்வரி (வேலணை கிழக்கு) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை கச்சேரி YMCA பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கச்சேரியடியிலுள்ள YMCA காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (4460)

### மீண்டும் இயங்குகிறது

6-2-93 முதல்மீண்டும்இயங்குகின்றது சோதிட விலாச புத்தகசாலை 46, பெரிய கடை யாழ்ப்பாணம். எம்மிடம், சமய நூல்கள், விஞ்ஞான புத்தகங்கள் சோதிட, வைத்திய நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்கள், ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகின்றன. சோதிடப்பிரகாசயந்திரசாலை கொக்குவில். (4463)

### ENGLISH

English for G.A.Q and Degree ESL) சகல பரீட்சைகளுக்கும் ஆங்கிலம் தெளிவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் பேசப்பயிற்றப்படுகிறது V.N.Kandasamy A.I.B. Part I London) Inter (London 87, திருநெல்வேலி றோட், (றயில் கடவைக்கு அண்மையில்) கொக்குவில். [4462]

### அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று (3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்

## வாழ்த்துகின்றோம் வாழிய வாழியவே !

பல ஆண்டுகள் இடைவெளியின் பின் தொழிலாளர் நலன் கருதி உருவாக்கப்பட்ட வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் செயற்பாடுகள் மூலம் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மட்டும் அல்லாது முதலாளிகளும் நன்மை பெற வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் பல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளமை நமக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. இரண்டாவது ஆண்டு நிறைவுடன் இன்னும் நூற்றாண்டுகள் வாழ்க, வளர்க என வாழ்த்துகிறோம்.

மண்டான் — க. முத்தையா
கரணவாய். — உற்பத்தியாளர்
(4464)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

## ஆண்டு 7 அநுமதி - 1993

(1992-ம் ஆண்டு ஏப்பிரலில் நடைபெற்ற 1991-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அடிப்படையில்)

1992 ஆம் ஆண்டு ஏப்பிரலில் நடைபெற்ற 1991-ம் ஆண்டு 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இவ்வருடம் ஆண்டு 07 இல் அநுமதி வழங்கப்படவுள்ளது.

இவ்வநுமதிக்கான விண்ணப்பப்படிவத்தைக் கல்லூரி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்படிவத்தைப் பெறவரும் போது, புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அதிபரிடமிருந்து மாணவன் புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளி, சுட்டிலக்கம் ஆகியவற்றை உறுதிப்படுத்திக் கொண்டு வரவும்.

விண்ணப்ப முடிவு திகதி - 19-03-1993

யாழ்ப்பாணம் — அதிபர்
1993-03-12 — யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.
(சி-6190)

## அனைத்துலக மகளிர் தினம் - 1993

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுவால் கொண்டாடப்படும் அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி சிறப்புரைகளும் கலை நிகழ்ச்சிகளும் 14-03-93 காலை 9 30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சபையால் இது தொடர்பாக வெளியிடப்பட்ட கைப்பிரதியில் 3 ஆம் மாதம் என்பதற்கு பதிலாக 4 ஆம் மாதம் என அச்சிடப்பட்டுள்ளது. அதனை 3 ஆம் மாதம் என திருத்தி வாசிக்குமாறு வேண்டுகிறோம்.

அவ்விழாவில் அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

இந் நிகழ்ச்சிக்கு கூட்டுறவாளர்களும், கூட்டுறவு மகளிர் குழுக்களும் உட்பட அனைவரும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- செயலாளர்
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
இல 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி 6189)

## யாழ். பல்கலைக்கழகம்

[ வெளிவாரி ]

G. A. Q.
B. A. part - I

1st in Com
B. Com

விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன

விபரங்களுக்கு:

**S. அருள்நங்கை**

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி - யாழ்

(சி-6180)

## Computer Programming in Basic Language

4 மாதங்கள்

திங்கள், புதன் வகுப்புகள்

**ஆரம்பம்: 17.03.93** மணி 8. 30

Lectures by: S. P. SIVAPATHASUNDARAM M. I. D. P. M. (Lond.)

★ கட்டணம் மாதம் 400/- மட்டுமே
★ அச்சடித்த பாடக் குறிப்புக்கள் இலவசம்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

(Pioneers in Computer Education)

16,3rd CROSS STREET, JAFFNA.

(சி/6184)

## முக்கிய அறிவித்தல்

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

சனிக்கிழமைகளில் பிற்பகல் இரண்டு மணியுடனும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநாளும் மற்றும் வர்த்தக சங்க விடுமுறை நாட்களிலும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட நல்லூர் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருத்தல் வேண்டும் என நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது மருந்துக்கடைகள், தேநீர்க்கடைகள், மண்ணெண்ணெய் கடைகள், மிதிவண்டி திருத்தும் நிலையங்கள் ரயர் ஒட்டும் கடைகள் பழக்கடைகள், பத்திரிகைக் கடைகள் ஆகியன விதிவிலக்காகும். மேற்குறிப்பிட்ட கடைகள் விடுமுறை நாட்களில் சம்பந்தப்பட்ட பொருட்களை மட்டும் விற்பனை செய்யுமாறு கேட்டுக்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்கள் ஒன்றிணைந்து நடத்தும் றீகன் நகர் கப்டன் ஜிம்கலி சனசமூக நிலைய வளர்ச்சிக்காக

தமிழோசை புகழ்
அருணா இசைக் குழுவினர் வழங்கும்

## இனிக்கும் இதயகானங்கள்

(இசை நிகழ்ச்சி)

இடம்: வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அரங்கு
காலம்: 14-03-1993 (ஞாயிறு)
காட்சிகள்: பி. ப. 2-30 மாலை 6-00 மணி

விளம்பர அன்பளிப்பு:-
அழகிய தங்க நகைகளுக்கு நாடவேண்டிய இடம்:

**இந்திரா ஜுவெலரி**
181, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (சி-6183)

## ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி

**சின்னத்தம்பி சிதம்பரம்**

தோற்றம் 10-1-1907 — மறைவு 23-2-1992

எம்மை உருவாக்கி வாழ்வளித்தாய் அம்மா
எம் வாழ்விற்கு ஒளிவிளக்காய் இருந்தாய் அம்மா
கடமை முடிந்ததென இறைவனடி சேர்ந்தாய் அம்மா
உங்கள் பிரிவால் மாலுமியற்ற கப்பல் போல் தளம்புகிறோம்.
வாடுகின்றோம் உங்கள்நினைவால் வந்திடுங்கள் எங்களிடம்
''உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென இறைவனை பிரார்த்திக்கின்றோம்.''

டச்சுறோட், — உங்கள் நினைவால் துயருறும்
சாவகச்சேரி. — பிள்ளைகள், மருமக்கள்.
(4442)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-13

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - காங்கேசன் துறை, மயிலிட்டி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட-2 குழந்தைகள், ஒருபெண் உட்பட 4தமிழர்கள்.

1988 ஆம்ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சி-வேணாவில் பகுதியில் எமது முகாம் ஒன்றின் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

சுரபி (மஞ்சுளா - திருநகர், கிளிநொச்சி)

லெப். இமெல்டா (மரியகோசி அமிர்தநாதன் -151, 4ம் குறுக்குத்தெரு, மணியந்தோட்டம், கொழும்புத்துறை - யாழ்.)

றொசானி (சுதாங்கனி செல்லத்துரை - சந்திரோதயம் கொடிகாமம் - யாழ்.)

சுகி (துஷ்யந்தி நடேசபிள்ளை - நீர்வேலி தெற்கு, கோப்பாய் - யாழ் )

இதே சம்பவத்தின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

V.N.Kandasamy A.I.B. Part I London) Inter (London 87, திருநெல்வேலி றோட், (றயில் கடவைக்கு அண்மையில்) கொக்குவில். [4462]

## அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாம்

எம்மிடம் றேடியோ, மணிக்கூடு திருத்தும் வாடிக்கையாளர்கட்கு மூன்று (3) அழகிய சாயிபாபா ஸ்ரிக்கர் இனாமாக வழங்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமை, சாவகச்சேரி (எலெக்ரோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள் திருத்துவதில் கைதேர்ந்தவர்கள். (சி-6063)

## பரீட்சை முடிவுகள்

யாழ் தொழில்நுட்பக்கல்லூரியில் கடந்த வருடம் நடைபெற்ற பொறியியல் துறைக்கான சிவில், மின்னியல் பரீட்சைமுடிவுகள்பரீட்சைத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்த விபரங்களை தொழில்நுட்ப கல்லூரியில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## செஞ்சிலுவை சஞ்சிகை வெளியீடு

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையின் சஞ்சிகை வெளியீடும் உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடலும் செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளையில் நாளை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

## காரையும், சாரதியையும் காணவில்லை

[கொழும்பு]

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி (திருமதி) விமலா டி சில்வாவின் காரையும், சாரதியையும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காணவில்லை எனப் பொலீசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு அஸ்கொட் அவனியூவினுள் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக சிறிலங்கா ஓட்டோமொபயில் அசோசியேடனில் வாடகைக்கு அமர்த்தப்பட்ட காரையும், சாரதியையும் காணவில்லை என்றே பொலீஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பொலீஸார் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## மகளிர் தினம் - 1993

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மாவட்ட மகளிர் குழுவால் கொண்டாடப்படும் அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி சிறப்புரைகளும் கலை நிகழ்ச்சிகளும் 14-03-93 காலை 9 30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். சபையால் இது தொடர்பாக வெளியிடப்பட்ட கைப்பிரதியில் 3 ஆம் மாதம் என்பதற்கு பதிலாக 4 ஆம் மாதம் என அச்சிடப்பட்டுள்ளது. அதனை 3 ஆம் மாதம் என திருத்தி வாசிக்குமாறு வேண்டுகிறோம்.

அவ்விழாவில் அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

இந் நிகழ்ச்சிக்கு கூட்டுறவாளர்களும், கூட்டுறவு மகளிர் குழுக்களும் உட்பட அனைவரும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

- செயலாளர்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை

இல 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி, 6189)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணுலகு:
17. 07. 1923

விண்ணுலகு:
11. 02. 1993



அமரர் உயர்திரு

### ஆறுமுகம் தம்பிப்பிள்ளை

(கலைவாணி சனசமூக நிலைய ஸ்தாபகரும் ஆலோசகரும்)

எங்கள் குலம் தளைக்க, குடும்பம் சிறக்க, பண்புபடர பாசம் தொடர, அனைவரையும் அரவணைத்து, ஆதரவு கூறி இடர்கள் பல நீக்கி, இன்ப வாழ்வு காட்டி, அன்பு மழையாய், பாச வெள்ளமாய், எங்கள் இதயம் நிறைய எங்களை வாழ்வித்த அன்பு தெய்வமே! எங்களை விட்டகலுமா உங்கள் நினைவுகள்!

எங்கள் குடும்ப தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும், அனுதாப செய்தி அனுப்பியவர்களுக்கும், இதய பூர்வமான நன்றிகள்! இன்று நடைபெறும் 31ஆம் நாள் கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

02/11 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
மகன்.
(4461)

(Pioneers in Computer Education)

16,3rd CROSS STREET, JAFFNA. (சி/6184)

## முக்கிய அறிவித்தல்

### நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

சனிக்கிழமைகளில் பிற்பகல் இரண்டு மணியுடனும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநாளும் மற்றும் வர்த்தக சங்க விடுமுறை நாட்களிலும் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட நல்லூர் பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருத்தல் வேண்டும் என நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் தீர்மானித்துள்ளது மருந்துக்கடைகள், தேநீர்க்கடைகள், மண்ணெண்ணெய் கடைகள், மிதிவண்டி திருத்தும் நிலையங்கள் ரயர் ஓட்டும் கடைகள் பழக்கடைகள், பத்திரிகைக் கடைகள் ஆகியன விதிவிலக்காகும். மேற்குறிப்பிட்ட கடைகள் விடுமுறை நாட்களில் சம்பந்தப்பட்ட பொருட்களை மட்டும் விற்பனை செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எரிபொருட்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையங்கள் தனியே எரிபொருட்களை மட்டும் விற்பனை செய்யுமாறும் வேறு எந்தப் பொருட்களையும் எந்த நாட்களிலும் விற்பனை செய்யவேண்டாம் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

என். கே. குலசிங்கம்
தலைவர்

சு. தனபாலசிங்கம்
செயலாளர்

(சி/6186)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
21 - 05 - 62



தாயக மண்ணில்
13 - 03 - 88

### லெப்டினன்ட் கேணல் ஜொனி

(விக்னேஸ்வரன் விஜயகுமார்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் என்னும் இடத்தில் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தால் நயவஞ்சகமாக கொல்லப்பட்ட லெப்டினன்ட் கேணல் ஜொனியை ஆழ்ந்த துயரத்துடன் நினைவு கூரும்-

சாரையடி
புலோலி கிழக்கு,
புலோலி. (4455)

தகப்பனார், சகோதரிமார்
மைத்துனர்மார்,
மருமக்கள்.

## 1993-03-13

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - காங்கேசன் துறை, மயிலிட்டி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட-2 குழந்தைகள், ஒருபெண் உட்பட 4 தமிழர்கள்.

1988 ஆம்ஆண்டு இதேதினத்தில் கிளிநொச்சி-வேணாவில் பகுதியில் எமது முகாம் ஒன்றின் மீது இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

சுரபி (மஞ்சுளா - திருநகர், கிளிநொச்சி)

லெப். இமெல்டா (மரியகோசி அமிர்தநாதன் -151, 4ம் குறுக்குத்தெரு, மணியந்தோட்டம், கொழும்புத்துறை - யாழ்.)

றொசானி (சுதாங்கனி செல்லத்துரை - சந்திரோதயம் கொடிகாமம் - யாழ்.)

சுகி (துஷ்யந்தி நடேசபிள்ளை - நீர்வேலி தெற்கு, கோப்பாய் - யாழ் )

இதே சம்பவத்தின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ஹெலன் (அனுசியா இராசதுரை - வெடியரசன் வீதி, காரைநகர் - யாழ்.)

டொறின் (சாந்தினி துரைசிங்கம் - வெள்ளாம் போக்காட்டி, அல்லாரை, கொடிகாமம்-யாழ்.)

முல்லைத்தீவு-முத்தையன்கட்டுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

வின்சன் (3ஆம் வாய்க்கால் - கிளிநொச்சி)

பொடியப்பு (சுந்தரலிங்கம் கிருஷ்ணசிங்கம்[கிருஷ்ணன்] பெரியவிளான், இளவாலை - யாழ்.)

இந்தியாவிலிருந்து பேச்சுவார்த்தைக்கென அழைத்து வரப்பட்டு, முல்லைத்தீவு - தேவிபுரம் பகுதியில் வைத்து இந்தியப்படையினரால் நயவஞ்சகமாகச் சுட்டுக்கொல்லப்பட்ட

லெப். கேணல் ஜொனி (விக்னேஸ்வரன் விஜயகுமார்-சாரையடி, புலோலி தெற்கு, பருத்தித்துறை-யாழ்)

1989 ஆம் ஆண்டு யாழ்-கலட்டிப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

யாபு (பேரின்பநாயகம் குணநாயகம் - குணநாயகம் வீதி, திருநெல்வேலி கிழக்கு- யாழ்.)

மன்னாரில் தேசவிரோதிகளினால் அடித்துக் கொல்லப்பட்ட தமிழ் மாணவன்.

1991 ஆம் ஆண்டு மட்டு- தன்னாமுனை சீனன்வாடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

மகேந்திரா (சிற்றம்பலம் கோணேஸ்வரன் - பெரிய உப்போடை - மட்டு.)

மட்டு - செட்டியார் வீதியில் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட வந்தாறுமூலை வாசியான தமிழ் இளைஞன், செங்கலடியைச் சேர்ந்த வயோதிபர்.

1992 ஆம் ஆண்டு தமிழீழக் கடற்பரப்பில் [குருநகர்ப் பகுதியில்] 03 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம் .

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6185)

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

சுயராஜ்யம் நம் பிறப்புரிமை. நாமே அதைப் பறிகொடுத்தால் ஒழிய, அதைப் பறிக்க முடியாது.

- மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 13- 03- 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

# அரசின் தீர்வுத்திட்டம்

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை பெரும்பாலும் எதிர்பார்த்தது போலவே வெளிவந்துள்ளது. ''வடக்கு - கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாகத் தனித்தனி அலகுகளாகப் பிரிக்கப்பட வேண்டும். இம்மாகாணங்களுக்கு இந்திய அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ளது போன்ற கூடிய தன்னாட்சி வழங்கப்பட வேண்டும்'' என்பதே இப்பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் சிபார்சு ஆகும்.

தெரிவுக் குழுவின் இவ் அறிவிப்பானது இக்குழு இதுவரை பாராளுமன்றத் தெரிவுக் குழுவாக செயற்படாமல் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களின் தெரிவுக் குழுவாகவே செயற்பட்டுள்ளது என்பதைத் தெளிவாக விளங்கப்படுத்தியுள்ளது. இனப்பிரச்சினைக்குப் பாராளுமன்றத் தெரிவுக் குழு தீர்வைத் தரப் போவதில்லை என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். இது குறித்துத் தமிழ் மக்களோ அன்றி விடுதலைப் புலிகளோ எந்த வித குழப்பமும் கொண்டிருக்கவில்லை, இதனால் முன்கூட்டியே அவர்கள் தெரிவுக் குழுவை நிராகரித்து விட்டனர்.

ஆனால் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் இது குறித்துச் சில அற்ப ஆசைகளைக் கொண்டிருந்தன. தமது அரசியலுக்கான பற்றுக்கோடாக இதனை எண்ணி இருந்தன. இதேவேளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும்ஆரம்பத்தில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு ஒத்தாசை வழங்கி தமது சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் இனப் பிரச்சினைக்கு முன்னேற்றகரமான தீர்வுத் திட்டம் ஒன்றைக் கொண்டு வரலாம் என நம்பியது.

அமைச்சர் தொண்டமான் வைத்த தீர்வுத் திட்டம் சிங்கள பேரினவாத சக்திகளிடம் இருந்து எழுந்த பெரும் எதிர்ப்பினால் தெரிவுக் குழுவின் கவனத்தில் கொள்ளப்படாமலே போனது. இதனால் இ. தொ. கா வும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரித்து, தெரிவுக் குழுவைப் புறக்கணித்து அதிலிருந்து வெளியேறியது.

தமிழ்க் குழுக்களோ, குழப்பமடைந்த நிலையில் தொடர்ந்தும் பங்குபற்றி வந்தன. அதே வேளை தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் கட்சி என்ற நிலையில் இருந்து விலகி, தனிப்பட்ட ரீதியில் சில தீர்வுத் திட்டங்களை முன்வைத்தனர். இதில், யாழ். மாவட்ட எம். பி. களில் ஒருவரான சிறிநிவாசன் முன்வைத்த வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனி

## நெருப்புக்காய்ச்சல் பரவுகிறது

குருநகரில் கடந்த சில தினங்களில் நான்கு பேர் நெருப்புக்காய்ச்சல் நோய் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார்கள் என யாழ். மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்நோய் சிறுவர்களை மாத்திரமன்றி இப்பகுதியில் வயோதிபர்களையும் தாக்கியுள்ளதாக வைத்தியக் குறிப்புக்கள் தெரிவிப்பதாக இப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. [17]

# தீவக ஆசிரியர்களின் ஒய்வூதியம் வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

தீவகப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இளைப்பாறியபோது ஆவணங்கள் இல்லை என்ற காரணத்தால் வழங்கப்படாதிருந்த ஒய்வூதியத்தை வழங்க மத்திய கல்வி அமைச்சு முன்வந்துள்ளது. குறிப்பாக அரசுக்குச் சேர வேண்டிய பொருள் கொடுப்பனவு விபரம் கொடுக்க முடியாதநிலை இருந்ததாலேயே ஓய்வூதியம் மறுக்கப்பட்டது.

யாழ். கல்வித் திணைக்கள கணக்காளர் கொழும்பு சென்று அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பிறகே அமைச்சு ஓய்வூதியம் வழங்க இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வடக்கு - கிழக்கு மாகாண சபையிடமிருந்து முற்பணமாக ஒரு லட்சம்ரூபா பெற்று மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளைப் பெறவும் கணக்காளர் ஏற்பாடு செய்துள்ளார். அப்பியாசக் கொப்பிகள் அடுத்த கப்பலில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொப்பிகள் பள்ளிக்கூடங்கள் மூலமாக மாணவர்களுக்குக் கொழும்பு விலையில் வழங்கப்படவுள்ளன என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் கல்வித் திணைக்களத்தின் பாவனைக்கு ஓர் ஓட்டோவையும் யாழ்ப்பாணம் அனுப்பக் கல்வி அமைச்சு முன்வந்துள்ளதாம்.

## கற்பூரம் கொண்டு வந்த லொறிச் சாரதி கைது

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தால் சோதனைக் குட்படுத்தப்பட்ட லொறி ஒன்றினுள் கற்பூரம் காணப்பட்டதை அடுத்து லொறிச்சாரதியும் கிளினரும் கைதாகினர். அந்த லொறியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா ஈரற்பெரிய புளியங்குளம் வாகன சோதனை முகாமிலேயே இது இடம்பெற்றது.

பஞ்சலிங்கம் என்றபுதுக்குடியிருப்பைச் சேர்ந்த சாரதியும் குமார் என்ற வவுனியாவைச் சேந்த கிளினருமே கைதாகினார்கள் இவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (தி)

## மூன்று வருடம் திறக்காத விஞ்ஞான ஆய்வுகூடம்

### மேற்பார்வை குழு துப்புரவு செய்தது

(யாழ்ப்பாணம்)

மாவட்ட பரிசோதனை மேற்பார்வைக் குழுநேற்றுமுன் தினம்காலை பாடசாலை விஞ்ஞானஆய்வு கூடம் ஒன்றை துடைப்பான் கொண்டுசுத்தப்படுத்தித் தூசுகளைத் தட்டி அகற்றியது.

யாழ்ப்பாண கல்வித்திணைக்களத்திலிருந்து சென்ற மாவட்ட பரிசோதனை மேற்பார்வைக்குழுநேற்று முன்தினம்காலை வடமராட்சிக்கல்விக் கோட்டத்தில்கல்லூரிஒன்றைப் பார்வையிட்டபோது அக் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வு கூடம் கடந்த மூன்று வருடங்களாகப் பூட்டி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. பிரதிப் பணிப்பாளர்களையும், ஏனைய அதிகாரிகளையும் உள்ளடக்கிய ஒன்பது பேர் கொண்ட இந்தக்குழு சம்பந்தப்பட்ட அதிபரை ஆய்வு கூடத்தைத் திறக்கும்படி பணித்தபோது ஆய்வு கூடத்தில் தூசு படிந்திருந்ததோடு, குப்பையும் கூழமுமாகக் காணப்பட்டது. அதிர்ச்சியடைந்த அதிகாரிகள் குழு துடைப்பான் மற்றும் பனை ஓலை கொண்டு தூசு தட்டி ஆய்வு கூடத்தைத் துப்புரவு செய்து நீர் கொண்டு கழுவியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பணிக்குப் பிள்ளைகளின் உதவியும் பெறப்பட்டது.

பெறுமதியான விஞ்ஞான பரிசோதனைக் கருவிகள் மற்றும் இரசாயனப் பொருள்கள் கடந்த மூன்று வருடங்களாகப் பாவிக்கப்படாதிருந்ததோடு, மாணவர்களுக்கான எந்த வித செயல் அனுபவக் கல்வியும் ஆய்வு கூடத்தில் மூன்று வருடங்களாக நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஆய்வு கூடத்தில் முதன்முறையாகப் பரிசோதனைக் கருவிகளைக் கண்ட உயர் வகுப்பு மாணவர்கள் அதிர்ச்சி தெரிவித்தனர். பாடசாலைச் சுற்றாடலில் உள்ள பெற்றோர்கள் மாவட்ட பரிசோதனை மேற்பார்வைக் குழுவின் முயற்சியைப் பாராட்டிப் பேசிக் கொண்டார்கள்.

## நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க இரண்டாம் ஆண்டு நிறைவு தினமும் நிர்வாக சபைத்தெரிவும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் இடம் பெறும்,

இப்பொதுக் கூட்டத்திலும் நிர்வாக சபைத் தெரிவிலும் சகல சுருட்டுத் தொழிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகசபையினர் கேட்டுள்ளனர்.

## கிரில்லகம ஆடைத் தொழிற்சாலை

## மூடுவதற்கு முன்பாக சம்பளம் வழங்குக

(அனுராதபுரம்)

சம்பளத்தை வழங்கி விட்டு ஆடைத் தொழிற்சாலைக்கு மூடு விழா நடத்தும்படி அனுராதபுரம் கிரில்லகம ஆடைத் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் கேட்டுள்ளனர்.

மூன்று மாதச் சம்பளத்தை வழங்காமல் நிர்வாகம் தொழிற்சாலையை மூடியதைத் தொடர்ந்தே மேற்படி தொழிற்சாலையில் வேலை பார்க்கும் பெண்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண் தொழிலாளி ஒருவரின் மாதச் சம்பளம் 900ரூபா இத் தொழிற்சாலையில் 200பெண் தொழிலாளர்கள் உள்ளனர்.

## கொழும்பு அகதிகள்

## இடமாற்றம் செய்ய மாற்றுத் திட்டம் இல்லை

[கொழும்பு]

வடபகுதியிலிருந்து இடம் பெயர்ந்து கொழும்பின் பல பகுதிகளிலும் தங்கியுள்ள அகதிகளை வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு உரிய மாற்று இடம் கிடைக்கவில்லை என கூறப்படுகிறது.

கடந்த கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துபம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவில், கொட்டாஞ்சேனை விவேகானந்தா சபை மண்டபம், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், முகத்துவாரம் ஆகிய இடங்களில் வடபகுதித் தமிழர்கள் பல ஆயிரக்கணக்கில் அகதிகளாகத் தங்கியுள்ளமைதெரிந்ததே. இவர்களை இப்பகுதிகளிலிருந்து இடமாற்றுமாறு பல அமைப்புகள் கோரிக்கை விடுத்ததை அடுத்து தற்போது இவர்களை இடமாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சமூக சேவைத் திணைக்களம் இவர்களை அப்புறப்படுத்தக்கூடிய மாற்றுவசதி இல்லாத காரணத்தினால் இவர்களை மாற்ற முடியாது எனத் தெரிவித்துள்ளது.

## டில்லிபயணம்

புதுச்சேரி காங்கிரஸ் அரசுக்கு அ. தி. மு. க அளித்து வந்த ஆதரவு விலக்கிக்கொள்

# பி. ஜே. பியின் பேரணி

## விளையாட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ். இந்துக் கல்லூரிக்கும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையில்நடைபெற்ற 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இப்போட்டி ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இப்போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி அணித் தலைவர் வரதன் மிகவும் சிறப்பாக விளையாடி 163 ஓட்டங்களை அடித்து ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்று சாதனை ஒன்றை நிலை நாட்டினார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ்.இந்துக்கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் 3விக்கட் நஷ்டத்திற்கு 228 ஓட்டங்களைப் பெற்றது. ஹாட்லிக் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்சில் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 208 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அகிலரட்னம் 56 ஓட்டங்களைப் பெற்றார்.இந்தப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி வீரர்கள் ராகவன் 6 விக்கெட்டுக்களையும், நந்தகோபாலன் 5 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

(யாழ்ப்பாணம்)

தடகள விளையாட்டு விழா 1993 வடமராட்சிவடக்கு பிரதேச செயலர் திரு. சி. முருகேசபிள்ளை அவர்கள் தலைமையில் ஹாட்லிக்கல்லூரி மைதானத்தில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதமவிருந்தினராக பிரதி யாழ் மாவட்ட ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. சு. கனகராசா அவர்களும் கலந்து கொள்கின்றனர்இன்று பி.ப 1.00 மணிக்கும் நாளை காலை 9.00 மணிக்கும் விழா ஆரம்பமாகும் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலகம் கேட்டுக் கொண்டுள்ளது. (சி)

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் திரு. சி. முருகேசம்பிள்ளை தலைமையில் இன்றும் நாளையும் தடகள விளையாட்டு விழா நடைபெறவுள்ளது. (யோ)

(தென்மராட்சி)

பளை உதவி அரசாங்க

தமது சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் இனப் பிரச்சினைக்கு முன்னேற்றகரமான தீர்வுத் திட்டம் ஒன்றைக் கொண்டு வரலாம் என நம்பியது.

அமைச்சர் தொண்டமான் வைத்த தீர்வுத் திட்டம் சிங்கள பேரினவாத சக்திகளிடம் இருந்து எழுந்த பெரும் எதிர்ப்பினால் தெரிவுக் குழுவின் கவனத்தில் கொள்ளப்படாமலே போனது. இதனால் இ. தொ. கா வும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நிராகரித்து, தெரிவுக் குழுவைப் புறக்கணித்து அதிலிருந்து வெளியேறியது.

தமிழ்க் குழுக்களோ, குழப்பமடைந்த நிலையில் தொடர்ந்தும் பங்குபற்றி வந்தன. அதே வேளை தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் கட்சி என்ற நிலையில் இருந்து விலகி, தனிப்பட்ட ரீதியில் சில தீர்வுத் திட்டங்களை முன்வைத்தனர். இதில், யாழ். மாவட்ட எம். பி. களில் ஒருவரான சிறிநிவாசன் முன்வைத்த வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனியான சமஷ்டி அமைப்பு என்ற தீர்வுத் திட்டம் பரபரப்பாகப் பேசப்பட்டதானாலும் 'சமஷ்டி' என்ற பிரயோகத்தை சிங்களப் பேரினவாத சக்திகள் கண்ணை மூடிக் கொண்டு எதிர்த்தன.

இந்நிலையில்தான் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ளது. இவ்அறிக்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனித்தனி அலகுகளாக இயங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு 'சமஷ்டி' என்ற சொற் பிரயோகத்தையே பயன்படுத்தத் தெரிவுக்குழு அஞ்சியுள்ளது போல் தெரிகின்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தன்னாட்சி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள தெரிவுக்குழு அவற்றைப் பற்றியும் தெளிவாக ஏதும் குறிப்பிடவில்லை.

இதேவேளை இப்பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முழுமையான அறிக்கையும் எமக்குக் கிடைக்காவிட்டாலும் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் அனைத்தும் எதுவித முரண்பாடுமின்றி இவ் இடைக்கால அறிக்கையை நிராகரித்த தொன்றே இவ் அறிக்கையில் அற்ப சொற்பமான அளவில் கூட தமிழ் மக்களுக்கு எதையும் வழங்கவில்லை என்பதைத் தெளிவாக்குகிறது. இல்லாவிடில் இத் தமிழ்க் குழுக்கள் எடுத்த எடுப்பில் அதனை நிராகரித்திருக்கப் போவதில்லை. அதனைக் கொண்டு அரசியல் நடத்தவே முற்பட்டிருப்பார்கள்.

ஆகையினால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் முடிவானது தனிச் சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சு என்பதே சரியானதாகும். இதில் பெரும்பான்மை அங்கத்தவர்களை ஐ. தே. கட்சி கொண்டிருந்ததினால் இது உண்மையில் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு வைத்துள்ள தீர்வுத் திட்டம் என்றே கொள்ளலாம்.

இந்நிலையில் பதினைந்து வருடங்களாக நீடித்து வரும் ஆயுதப் போராட்டத்திற்கு ஓர் அரசியற் தீர்வு காண்பதில் சிங்கள அரசு எதுவித முன்னேற்றகரமான தீர்வுத் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை. என்பது புலனாகிறது இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண அரசு முற்படுவதாகக் கூறுவதெல்லாம் வெறும் ஏமாற்றமாகும். இதனை உலகம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும். குறிப்பாகச் சிறிலங்கா அரசிற்கு நிதி உதவி புரிந்து, போரைத் தொடர்ந்து நடத்துவதற்குத் துணைபோகும் மேற்குலகம் புரிந்துகொள்ளவேண்டும்.

---

வடபகுதியிலிருந்து இடம் பெயர்ந்து கொழும்பின் பல பகுதிகளிலும் தங்கியுள்ள அகதிகளை வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கு உரிய மாற்று இடம் கிடைக்கவில்லை என கூறப்படுகிறது.

கடந்த கால சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்துபம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவில், கொட்டாஞ்சேனை விவேகானந்தா சபை மண்டபம், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம், முகத்துவாரம் தமிழர்கள் பல ஆயிரக்கணக்கில் அகதிகளாகத் தங்கியுள்ளமைதெரிந்ததே. இவர்களை இப்பகுதிகளிலிருந்து இடமாற்றுமாறு பல அமைப்புகள் கோரிக்கை விடுத்ததை அடுத்து தற்போது இவர்களை இடமாற்றும முயற்சியில் ஈடுபட்டிருந்த சமூக சேவைத் திணைக்களம் இவர்களை அப்புறப்படுத்தக்கூடிய மாற்றுவசதி இல்லாத காரணத்தினால் இவர்களை மாற்ற முடியாது எனத் தெரிவித்துள்ளது.

---

நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க இரண்டாம் ஆண்டு நிறைவு தினமும் நிர்வாக சபைத்தெரிவும் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் இடம் பெறும்,

இப்பொதுக் கூட்டத்திலும் நிர்வாக சபைத் தெரிவிலும் சகல சுருட்டுத் தொழிலாளர்களையும் கலந்து கொள்ளுமாறு நிர்வாகசபையினர் கேட்டுள்ளனர்.

---

பாவிக்கப்படாதிருந்ததோடு, மாணவர்களுக்கான எந்த வித செயல் அனுபவக் கல்வியும் ஆய்வு கூடத்தில் மூன்று வருடங்களாக நடைபெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. ஆய்வு கூடத்தில் முதன்முறையாகப் பரிசோதனைக் கருவிகளைக் கண்ட உயர் வகுப்பு மாணவர்கள் அதிர்ச்சி தெரிவித்தனர். பாடசாலைச் சுற்றாடலில் உள்ள பெற்றோர்கள் மாவட்ட பரிசோதனை மேற்பார்வைக் குழுவின் முயற்சியைப் பாராட்டிப் பேசிக் கொண்டார்கள்.

---

காலை 9.00 மணிக்கும் விழா ஆரம்பமாகும் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலகம் கேட்டுக் கொண்டுள்ளது. (சி)

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் திரு. சி. முருகேசம்பிள்ளை தலைமையில் இன்றும் நாளையும் தடகள விளையாட்டு விழா நடைபெறவுள்ளது. (யோ)

(தென்மராட்சி)

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் விளையாட்டு விழா நாளை பி. பகல் 2 மணிக்கு பளையில் உள்ள பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டுத் தலைவர் திரு. இ. ஐயாத்துரை பிரதேச செயலாளர் பளை அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது இதில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரசாங்கஅதிபர் திரு க. பொன்னம்பலம் அவர்களும் சிறப்புவிருந்தினராக கிளிநொச்சி திட்டப்பணிப்பாளர் செயலகம் திரு. க. மகாலிங்கம் பளை பிரதேச செயலாளர் திரு. ந. பாலச்சந்திரன், பளை கொத்தணி அதிபர் திரு. சு. புண்ணியசீலன் பளை ப. கூ. ச. தலைவர் திரு. செ. மார்க்கண்டு பளை வட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. அன்பு, பளை காவல்துறை பொறுப்பாளர். திரு. செ. செல்வவினாயகர் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கைதடிக் கொத்தணி மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய 15 வயதிற்குட்பட்ட பெண்கள் உடற்பயிற் சிஅணி தென்மராட்சி கல்விக்கோட்ட மட்டத்திலும் தெரியப்பட்டு மாவட்ட போட்டியில் பங்கு பற்றும் தகுதியைப் பெற்றது.

## தமிழ்த்தின விழா

யா/கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் கடந்த புதன் கிழமை தமிழ்த்தின விழா தமிழ் மன்றத் தலைவர் திருமதி த. அருச்சுனன் தலைமையில் ஆரம்பமாகியது

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சாவகச்சேரிக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. சின்னத்தம்பி அவர்கள் பங்குபற்றிய மாணவர்களின் திறமையைப் பாராட்டினார்.

---

## டில்லி பயணம்

புதுச்சேரி காங்கிரஸ் அரசுக்கு அ. தி. மு. க அளித்து வந்த ஆதரவு விலக்கிக்கொள்ளப்பட்டதையடுத்து ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து பிரதமர் நரசிம்மராவுடன் பேச்சுகள் நடத்த அம்மாநில முதலமைச்சர் வி. வைத்தியலிங்கமும், பிரதேச காங்கிரஸ் தலைவர் பி. சண்முகமும் டில்லி சென்றுள்ளனர்.

30 உறுப்பினர்கள்கொண்ட பாண்டிச்சேரி சட்டசபையில் காங்கிரஸ் உறுப்பினர் 15 பேரும் அ. தி. மு. க உறுப்பினர் 6 பேரும், தி. மு. க உறுப்பினர் 4 பேரும், மாக்ஸிய கம்யூனிஸ்ட், ஜனதாதள் உறுப்பினர்கள் தலா ஒருவரும் 3 சுயேட்சை உறுப்பினர்களும் உள்ளனர்.

# பி. ஜே. பியின் பேரணி பொதுக் கூட்டமாகவே நடக்கும்

## கட்சி துணைத்தலைவர் அறிவிப்பு

எதிர்வரும் 21ம் திகதி சென்னையில் பாரதீயஜனதா கட்சி நடத்த திட்டமிட்டிருந்த பேரணி பொதுக் கூட்டமாக நடைபெறும் என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தகவலை இக்கட்சியின் துணைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி நேற்று தெரிவித்தார்.

இதனிடையே பி.ஜே.பியின் உத்தேச பேரணிக்கு அனுமதியளிப்பதை தமிழக அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டு எனக்கோரி மத்திய உள்துறை அமைச்சர் சவான் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதியுள்ளார். பேரணிநடைபெறவுள்ள தினம் இஸ்லாமிய பண்டிகை ஒன்று இடம்பெறவுள்ளதாக சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர் சவான் உத்தேச பேரணி பாதையில் பல மசூதிகளும் உள்ளதால் இது மீண்டும் கலவரங்களை ஏற்படுத்தலாம் என குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அமைதியைகருத்திற் கொண்டு ஊர்வலத்தை அனுமதிக்க வேண்டாம் என அவர் முதலமைச்சர்ஜெயலலிதாவை கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கு பதில் அனுப்பியுள்ள ஜெயலலிதா பி.ஜே.பி பேரணிக்காக அனுமதி கோரினால் அனைத்து விடயத்தையும் ஆராய்ந்து மாநில அரசு முடிவு எடுக்கும் என்றார்.

# சந்தர்ப்பவாத கூட்டணி உடைந்ததில் வியப்பில்லை

## வி. பி. சிங் கருத்து

அ. தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி சந்தர்ப்பவாத அரசியல் உறவு. இது உருவாவதிலோ உருக்குலைவதிலோ வியப்பேதுமில்லை என நேற்று முன்தினம் தமிழ்நாடுவந்துசேர்ந்தஜனதாதள தலைவர்வி.பி. சிங் கருத்துத்தெரிவித்துள்ளார்

இனிமேலாவது காங்கிரஸ் தலைவர்கள் கூட்டணி நீடிக்கின்றது என கூறமாட்டார்கள் என நினைக்கிறேன் என்று முன்னாள் மாநில அமைச்சர் திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

# மதம் அரசியலில் கலப்பதை மத்திய அரசு தடுக்கும்

\- நரசிம்மராவ்

[டில்லி]

அரசியலில் மதம் கலக்கப் படுவதை தடுக்க மத்திய அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ்நேற்றுமுன் தினம்பாராளுமன்றத்தில்தெரிவித்தார்.

ஜனாதிபதி உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர் இதற்காகத் தேவையான திருத்தங்கள் சட்டத்தில்கொண்டுவரப்படும் என்றார்.

# பிரிட்டிஷ் ஐ. நா. படையினர் கிராமத்தவரால் முற்றுகை

கிழக்கு பொஸ்னியாவில் ஒரு முஸ்லிம் கிராமத்தைச் சார்ந்த மக்கள் ஒரு தொகுதி பிரிட்டிஷ் ஐ. நா. படையினரை சுற்றி வளைத்து பணயக் கைதிகளாக வைத்துள்ளனர்.

தமது பகுதியை ஆக்கிரமித்துள்ள சேர்பியர்கள் விதிக்கும் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புதெரிவிக்குமுகமாகவே முஸ்லிம்கிராமத்தவர்கள் இவ்வாறு நடந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள்களுக்கு பாதுகாப்பாக சென்ற பிரிட்டிஷ் படையினரைக் கொண்ட ஐ. நா. படை பிரிவு ஒன்றே இரண்டாயிரத்திற்கும் அதிகமான கிராமத்தவர்களால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர். இப் பிரிவின் கமாண்டரான மேஜர் ஏபிரகாம் பிரிட்டிஷ் தளத்துக்கு அனுப்பிய தகவலில் இம் மக்கள் தம்மை சேர்பியரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்குமாறு கோருவதாகவும் அக் கிராமவாசிகளால் எந்தவிதமான அச்சுறுத்தலும் தரப்படவில்லைஎன்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் வீரர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் ஐ. நா. அதிகாரிகள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

தென்சூடான் நகரிற்கு

# 10 வருடங்களின் பின் ஐ. நா. உணவுப் படகு

உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு சென்ற ஐ. நா. படகு ஒன்று நைல்நதியூடாக இரண்டுமாதகால பயணத்தின் பின் தென்சூடான் தலைநகரான ஜூபாவைச் சென்றடைந்துள்ளது.

சூடானில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 10 வருடங்களின் பின் தென்சூடான் வந்துள்ள முதலாவது ஐ. நா உதவித் தொகுதி இதுவென்பதுகுறிப்பிடத்தக்கது. ஐ.நா. படகில் கொண்டுவரப்பட்ட அரைப்பகுதி நிவாரணப் பொருள்கள் வரும்வழியில் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது

கொண்டுவரப்பட்டுள்ள உணவுப் பொருள்களும் நகரில் உள்ளவர்களுக்கு ஒரு வாரத்திற்கே போதுமானதாகும்.

ஈழநாதம்

# தமிழ்நாடு காங்கிரஸ் உறுப்பினர் மீது தாக்கு

## சட்டசபையில் பெரும் அமளிதுமளி

தமிழ் நாடு சட்டசபை இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் நேற்றுக் காலை சட்டசபை உறுப்பினர் விடுதியில் வைத்து மூவரால் தாக்கப்பட்டார். இதனையடுத்து தமிழ் நாடு சட்டப்பேரவையின் பட்ஜட் கூட்டத் தொடரின் முதல் நாளான நேற்று பெரும் கூச்சலும் குழப்ப நிலையும் ஏற்பட்டது.

சட்டப்பேரவையில் எதிர்க் கட்சி காங்கிரஸ் தலைவரான எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் காங்கிரஸ் உறுப்பினர் தாக்கப்பட்டது குறித்து திங்களன்று சபை கூடும்போது விவாதிக்கப்படவேண்டும் என சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

சபாநாயகரின் பதிலில் திருப்தியடையாத காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சபாநாயகரின் ஆசனத்தை நோக்கி கூட்டாக சென்று இச்சம்பவம் குறித்து உடனடியாக கவனம் செலுத்தவேண்டும் எனக் கோரினர். இதனால் சபையில் பெரும் அமளி நிலை ஏற்பட்டது. கூச்சல் குழப்பத்தின் மத்தியில் சபாநாயகர் காங்கிரஸ் உறுப்பினர்கள் நால்வரின் பெயரைக் குறிப்பிட்டு சபையை விட்டு வெளியேறுமாறு பணித்தார். அவர்கள் வெளியேற மறுக்கவே சபைக் காவலர்களால் அவர்கள் வெளியேற்பட்டனர். இதைத் தொடர்ந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறினர்.

கம்யூனிஸ்ட் கட்சி, மாக்ஸிய கம்யூனிஸ்ட், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்களும் கூடவே வெளிநடப்புச் செய்தனர். தி. மு. காவினர் நேற்றுசபைக்குசெல்லவில்லை.

## சட்டமன்ற உறுப்பினருக்கு பாதுகாப்பு இல்லை

### மத்திய அரசு தலையிட வேண்டும்

(சென்னை)

தமிழகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூடப் பாதுகாப்பு இல்லை என்றும், எனவே மத்திய அரசு உடனடியாகத் தலையிட வேண்டும் என்றும் கோரி, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்ற வளாகத்திற்கு வெளியே பலத்த கோஷம் எழுப்பினர்.

சர்வாதிகார ஆட்சி ஒழிக என்றும், மத்திய அரசு தலையிட வேண்டும் என்றும் காங்கிரஸ் ஊழியர்கள் கோஷம் எழுப்பியதைத் தொடர்ந்து பேரவைக் காவலர்கள் அங்கு வந்து உறுப்பினர்களைக் கலைந்து போகச் செய்தனர்.

## தமிழக காவல்துறை; முதல்வரின் கைப்பொம்மை

### வாழப்பாடி குற்றச்சாட்டு

பீட்டர் அல்போன்ஸ் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் இச் சம்பவத்திற்கு அ.இ.அ.தி.மு.கவினரே காரணம் என்றும், இது ஒரு பாஸிஸப்போக்கு என்றும் கூறியுள்ளார். அத்துடன் தமிழகத்தில் காவல்துறை செயலிழந்துவிட்டது என்பதையும், ஆளும் கட்சியின் கைப்பொம்மையாகிவிட்டது என்பதையும் இது மேலும் காட்டுவதாகவும் அவ் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## மாவீரர் உருவப்படங்கள்

கீழ்வரும் மாவீரர்களின் உருவப்படங்கள் தற்போது வெளிவந்துள்ளன. இம் மாவீரர்களின் உருவப்படங்கள் தேவையானோர் மாவீரர் பணிமனையில் அல்லது மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

லெப். அன்பழகன், தேசோபாயனந்தம் உத்தமசிகாமணி, வல்வெட்டித்துறை, 05-10-87.

2ஆம் லெப். ரெஜினோல்ட், கபிரியல் பேனாட் சபரிநாயகம், முள்ளியான் வெற்றிலைக்கேணி, 05-10-87.

வீ. வே. போமம் / சோமன் ஞானப்பிரகாசம் அருள் ஞானதாஸ் பருத்தித்துறை, 08-02-86.

வீ. வே. விஜி, கோமதி பூவிலிங்கம், ஆலடி ஒழுங்கை கோண்டாவில், 18-10-87.

மேஜர் அப்துல்லா, கணபதிப்பிள்ளை நகுலகுமார், கச்சாய் வீதி, சாவகச்சேரி, 05-10-87.

வீ. வே. அருச்சுனா, ஆசீர்வாதம் சகாயம், கள்ளிக்கட்டைக்காடு, மன்னார், 26-08-87.

வீ. வே. தயா, சலேற்றம்மா செபஸ்தியான், மாந்த-மன்னார், 10-10-87.

வீ. வே மாத்தையா, விமலநாதன், மட்டுநகர்.

2ஆம் லெப். ஆனந்தகுமார், ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் அலோசியஸ், மணற்காடு குடத்தனை, 05-10-87

வீ. வே. ஜெனா, புஸ்பலதா செபமாலை, கன்னாட்டி மன்னார், 10-10-87.

## இரு நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஈழநாதம் நிறுவனமும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் இணைந்து நடத்தும், தலைமைத்துவப் பயிற்சிக்கான இரு நாள் கருத்தரங்கு இன்றும், நாளையும் இந்துக்

## இன்று பண்டிதமணி நினைவுதினம்

''இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் ஏழாவது நினைவு தினம் இன்று ஆகும்.

பண்டிதமணி அவர்களின் தொண்ணூற்று நான்காவது பிறந்த தினம் எதிர்வரும் 27. 06. 93 ஞாயிறு கொண்டாடப்பட இருக்கிறது.

இந் நிகழ்வுகளை ஞாபகஞ் செய்யும் வகையில் பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப்போட்டியையும், பாடசாலை மாணவர்கள் அல்லாதவர்களிடையே கட்டுரைப் போட்டியையும் நடத்துவதுடன் பண்டிதமணி அவர்களது நூல் ஒன்றினையும் வெளியிடுவதற்குப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை ஆலோசித்து வருகின்றது. இவை சம்பந்தமான விபரங்கள் பத்திரிகைகளில் விரைவில் வெளியிடப்படும்''.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் காரியதரிசி ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் இத் தகவல்களை வெளியிட்டார்.

## இந்திய மீனவர்

புலிகள் இம் மீனவர்கள் 12 பேரையும் ஒப்படைத்தனர்

இந்நிகழ்வின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் முல்லைத்தீவு மாவட்ட சிறப்புத் தளபதி அன்பு, அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா. தமிழன்பன் ஆகியோரும் மரியானா ஹாரடாப்பி மற்றும் அவரது உதவியாளர் ஒருவரும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் சார்பில் கலந்துகொண்டனர்.

மீனவர்கள் அனைவரும் கண்களில் நீர் ததும்ப விடுதலைப் புலிகளைக் கட்டித் தழுவியவாறு விடைபெற்றனர்.

## இந்திய

இதேவேளை இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பம்பாய் விரைவதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்திய மத்திய அரசின் உளவு நிறுவனமான மான ''றோ'', தேசிய பாது

# தமிழக அரசிடம் விளக்கம் கோரப்படும்

## உள்துறை அமைச்சர் அறிவிப்பு

(டில்லி)

தமிழக சட்டப் பேரவை உறுப்பினர் விடுதியில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மாநில அரசிடமிருந்து உத்தியோகபூர்வமாக விளக்கம் கோரப்படும் என்று மாநிலங்களவையில் பேசிய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்

டில்லியில் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் பீட்டர்அல்போன்ஸ் தாக்கப்பட்ட சம்பவம் நேற்று எதிரொலித்தது. லோக்சபாவான மக்களவையில் அ. இ. அ. தி. மு. க உறுப்பினர் பி. ஜீ. நாராயணன் பேசுகையில் இச் சம்பவம் தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென முதல்வர் சட்டப் பேரவைக்கு உறுதியளித்திருப்பதாகவும், குற்றம் சுமத்தப்பட்டுள்ள சந்தேக நபர்களில் ஒருவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் தமிழக முதல்வரும், சட்டப் பேரவை சபாநாயகரும், பீட்டர் அல்போன்ஸ் தாக்கப்பட்டமை தொடர்பாக கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர் என்றும் தெரிவித்தார்

மாநிலங்களவையில் காங்கிரஸ் கட்சியின் ராமச்சந்திரனும், ஜனதாக் கட்சியின் சுப்பிரமணியம் சுவாமியும் இவ் விவகாரத்தை எழுப்பினர். அதற்குப்பதிலளிக்கையிலேயே அமைச்சர் சவான் மாநில அரசிடமிருந்து விளக்கம் கோரப்படும் என்று தெரிவித்தார்.

## புலமைப்பரிசில்

இது குறித்து அவ் அதிகாரி, மேலும் கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட படி 136 ஐ வெட்டுப்புள்ளியாக் கினால் கல்வி அமைச்சினால் சரியான வெட்டுப்புள்ளி அறிவிக்கப்படும்போது பல சிக்கல்கள் ஏற்படும் என்பதனால் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டதென கருத்துத் தெரிவித்தார்.

## யாழ்,

பட்ட இரண்டு மின் பிறப்பாக்கிகள் திரும்பவும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.(சி)

## முக்கிய

யாழ். குடாநாட்டிற்கு சங்குப்பிட்டி - கேரதீவு பாதையூடாக உணவு பொருட்களை வாகனம் மூலம் அனுப்பிவைப்பதற்காக அரசாங்க உயர் அதிகாரியுடனும், இரா

## மகர யாழ் விருதுக்குரியவரை அறிஞர்கள் தெரிவுசெய்வர்

அகில இலங்கை கம்பன் கழகத்தால் அறிவிக்கப்பட்ட மகர யாழ் விருதுக்குரிய சான்றோரை தெரிவு செய்ய நியமிக்கப்பட்ட அறிஞர் குழு நாளை ஞாயிறு காலை கூடி இவ்வாண்டுக்கான மகர யாழ் விருது பெறுபவரைத் தெரிவு செய்ய வுள்ளது.

திபாகம், தொண்டுமனப்பான்மை, கடமையுணர்ச்சி இனப்பற்று ஆகியவற்றுடன் இளம் தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரைத் தெரிவு செய்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான பணமுடிச்சு, தங்கப்பதக்கம், வெள்ளிக் கேடயம் உள்ளிட்ட விருதினை கம்பன் கழகம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திரட்டப்பட்ட மக்கள் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாண்டின் மகர யாழ் விருதுக்கான சான்றோரை கழகத்தால் நியமிக்கப்பட்ட அறிஞர் குழு தெரிவு செய்யவுள்ளது.

## 'குமணவில்' கணனி

யாழ். பல்கலைக்கழகத்திற்கு புதிய 'கணனி' ஒன்றை கொழும்பில் இருந்து பல்கலைக்கழக மானியக் குழு அனுப்பிவைத்துள்ளதாக தெரிய வருகின்றது.

சென்ற கிழமை பருத்தித்துறையை வந்தடைந்த 'குமண' கப்பலிலேயே இது எடுத்துவரப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

### மூளைமலேரியா

## ஒருவர் பலி

மூளை மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்றுயாழ்.போதனா வைத்தியசாலையில் மரணமடைந்தார். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பட்டு [வயது40] என்பவர் மந்திகை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தார் எனவும் பின்னர் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது மரணமடைந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

உ

நாடக அபிமானிகளே! இளங்கலைஞர்களை!!

ஆதரியுங்கள்!!!

இன்று கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக் கல்லூரியினரின் வளர்ச்சி நிதிக்கான

நாடக அரங்கேற்றமும் கலை நிகழ்ச்சிகளும்

கல்லூரி மாணவர்களின்

சபையை விட்டு வெளியேறு மாறு பணித்தார். அவர்கள் வெளியேற மறுக்கவே சபைக் காவலர்களால் அவர்கள் வெளியேற்றப்பட்டனர். இதைத் தொடர்ந்து காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் வெளியேறினர்.

## இரு நாள் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஈழநாதம் நிறுவனமும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் இணைந்து நடத்தும், தலைமைத்துவப் பயிற்சிக்கான இரு நாள் கருத்தரங்கு இன்றும், நாளையும் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் நான்கு மணி வரை நீடிக்கும் இக் கருத்தரங்குகளில் தகவல்கள், கருத்துக்கள், நுட்பங்கள் ஆகியவற்றின் பரிமாற்றம் மூலம் தலைமைத்துவம் என்பதில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

### சூரியகாந்தி

னைக்குத் தயாரான நிலையில் இருப்பதாக வருவாய் பகுதியினர். அறிவித்துள்ளனர். சூரியகாந்தி விதைகள் தேவைப்படுவோர் பலாலிவீதி கந்தர்மடத்தில் இருக்கும் நிதித்துறையின் வருவாய் பகுதியின் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

### சீரான

பொருள்களுக்கு பெரும் பற்றாக்குறையும் வேறொரு காலப்பகுதியில் உணவு விநியோகம் சீரானதாகவும் காணப்படுகிறது. இதனால் குடாநாட்டின் திறந்தவெளிச் சந்தையில் அத்தியாவசியப் பொருள்களின் ''பதுக்கல்'', ''பற்றாககுறை'', ''விலை உயர்வு'' ஆகிய நிலைமைகள் தொடர்ச்சியாக காணப்படுகிறது.

இவ்வாறான நிலைமைகளைக் கூடியவரையில் தவிர்த்துக்கொள்ளவும் குடாநாட்டுக்கு ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட சீரான வேகத்தில் உணவு விநியோகத்தை ஏற்படுத்திக் கொள்ளவுமே மேற்படி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

கொழும்பு செல்லும் திட்டப்பணிப்பாளர் அத்தியாவசிய சேவைகள் பிரிவு அதிகாரிகளுடன் மேற்படி விடயம் குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவார் (க)

தேவையானோர் மாவீரர் பணிமனையில் அல்லது மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

லெப். அன்பழகன், தேசோபாயனந்தம் உத்தமசிகாமணி, வல்வெட்டித்துறை, 05-10-87.

2ஆம் லெப். றெஜினோல்ட், கபிரியல் பேனாட் சபரி நாயகம், முள்ளியான் வெற்றிலைக்கேணி, 05-10-87.

வீ. வே. போமம் / சோமன் ஞானப்பிரகாசம் அருள் ஞானதாஸ் பருத்தித்துறை, 08-02-86.

வீ. வே. விஜி, கோமதி பூவிலிங்கம், ஆலடி ஒழுங்கை கோண்டாவில், 18-10-87.

மேஜர் அப்துல்லா, கணபதிப்பிள்ளை நகுலகுமார், கச்சாய் வீதி, சாவகச்சேரி, 05-10-87.

வீ. வே. அருச்சுனா, ஆசீர்வாதம் சகாயம், கள்ளிக் கட்டைக்காடு, மன்னார், 26-08-87.

வீ. வே. தயா, சலேற்றம்மா செபஸ்தியான், மாந்த-மன்னார், 10-10-87.

வீ. வே மாத்தையா, விமலநாதன், மட்டுநகர்.

2ஆம் லெப். ஆனந்தகுமார், ஞானப்பிரகாசம் பிரான்சிஸ் அலோசியஸ், மணற்காடு குடத்தனை, 05-10-87

வீ. வே. ஜெனா, புஸ்பலதா செபமாலை, கன்னாட்டி மன்னார், 10-10-87.

லெப். கேணல். குமரப்பா, பாலசுந்தரம் இரத்தின பாலன், நடராசா வீதி ரேவடி வல்வெட்டித்துறை, 05-10-87.

வீ. வே. ரூபி, மரியம்மா மாரிமுத்து, இலுப்பைக் கடவை - மன்னார், 03-11-87.

வீ. வே. டென்சில், சூசைமனுவல்மிக்கேல், தெட்சனா மருதமடு கோவில் மன்னார், 02-09-87.

வீ. வே ஸ்ராலின், கிருஷ்ணபிள்ளை சிறிஸ்கந்தநாதன், வடலிவளவு புலோலிதெற்கு, பருத்தித்துறை, 01-04-86.

வீ. வே. ஸ்ரார், வாரித்தம்பி பொன்னம்பலம், கல்வயல் சாவகச்சேரி, 31-03-86.

வீ. வே கருணா, செல்லத்துரை தயாகரன், எழுதுமட்டுவாள், 11-08-87.

வீ. வே கில்மன், செல்வநாயகம் செல்வக்குமார், பாலைக்குழி - மன்னார், 26-08-87.

2ஆம் லெப். மாலதி, சகாயசீலி பேதுறு, அடம்பன் மன்னார், 10-10-87

லெப். சலீம், சண்முகசுந்தரம் அரவிந்தன், கரணவாய் தெற்கு கரவெட்டி, 12-07-87.

வீ. வே. நிமல், பொன்னையா பூபாலசிங்கம், கெற்பலி மிருசுவில், 10-10-87.

வீ. வே. அலன், சிதம்பரநாதன் நிசாந்தன், திருநெல்வேலி, 18-10-87.

வீ. வே. புவி பொட்ஸ், சேதுநாயகம் ரவீந்திரராசா, புலோலி, பருத்தித்துறை, 16-04-86.

வீ வே. குமரன், கிட்டினர் ஆனந்தவடிவேல், கோண்டாவில் வீதி, கோப்பாய், 08-06-87

வீ. வே. ஆனந்தன், மாரிமுத்து மாதவன், உதயநகர் கிளிநொச்சி, 04-06-86.

வீ. வே. பன்னீர், நாகலிங்கம் பன்னீர்செல்வம், ஏழாலை தெற்கு சுன்னாகம், 18-12-87

இம்மாவீரர்களின் உருவப் படங்களைப்பெற்றுக்கொள்ள விரும்புவோர் தமிழீழ மாவீரர் பணிமனையுடன் அல்லது மாவட்ட அரசியல்துறைச் செயலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.


# ஸ்ரீதர் திரையரங்கில்...

# "தமிழோசை"

## தினசரி மாலை

## 4 மணிக்கும் 6 மணிக்கும்

காண்பிக்கப்படுகிறது. (சி-6149)


சிறப்புத் தளபதி அன்பு, அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இரா. தமிழன்பன் ஆகியோரும் மரியானா ஹாரடாப்பி மற்றும் அவரது உதவியாளர் ஒருவரும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் சார்பில் கலந்துகொண்டனர்.

மீனவர்கள் அனைவரும் கண்களில் நீர் ததும்ப விடுதலைப் புலிகளைக் கட்டித் தழுவியவாறு விடை பெற்றனர்.

### இந்திய

இதேவேளை இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் பம்பாய் விரைவதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இந்திய மத்திய அரசின் உளவு நிறுவனமான ''றோ'', தேசிய பாதுகாப்புக் காவல் படை, எம். எஸ். ரி உட்பட உயர்மட்ட மத்திய குழு ஒன்று பம்பாய் சென்றுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சினால் சரியான வெட்டுப்புள்ளி அறிவிக்கப்படும் போது பல சிக்கல்கள் ஏற்படும் என்பதனால் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டதென கருத்துத் தெரிவித்தார்.

### யாழ்,

பட்ட இரண்டு மின் பிறப்பாக்கிகள் திரும்பவும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.(சி)

### முக்கிய

யாழ். குடாநாட்டிற்கு சங்குப்பிட்டி - கேரதீவு பாதையூடாக உணவு பொருட்களை வாகனம் மூலம் அனுப்பி வைப்பதற்காக அரசாங்க உயர் அதிகாரியுடனும், இராணுவ உயர் அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்த உயர்தானிகராலயத்தினர் தயாராகி வருவதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சண்முகலிங்கம்

பட்டியோலை உடுவில் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சண்முகலிங்கம் 12. 3. 93 நேற்று சுகயீனம் காரணமாக காலமாகிவிட்டார். இவர் காலம் சென்றவர்களான சுப்பிரமணியம், சரஸ்வதி தம்பதியர்களின் அன்பு மகனும், சோதிமலரின் அன்புக் கணவரும் சுமதி, சுசிலா, சுபேரன், சுரேந்திரன், சுதர்சினி, சுபாநந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அ. முருகநாதனின் அன்பு மாமனும், காலம் சென்ற திருநாவுக்கரசு, திருமதி ம. கமலாதேவி, கணேசரத்தினம், விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [13. 3. 93] காலை 10.00 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்

தகவல்:

[4465] க. வித்தி [சிரித்திரன்]

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 12-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8570

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

24-7961, 24-0878, 71-4984, 24-6475, 26-6796, 42-1721, 26-6983, 41-9696, 42-1464, 27-6024, 27-4024, 22-2250, 28-6623, 28-1020, 27-8160, 27-6769.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-8035, 41-9652, 28-4147, 26-7525, 22-5622, 26-7627, 27-3910, 42-0849, 26-6077, 24-9938.


இன்று கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக் கல்லூரியினரின் வளர்ச்சி நிதிக்கான

# நாடக அரங்கேற்றமும் கலை நிகழ்ச்சிகளும்

கல்லூரி மாணவர்களின்

மிருதங்க இசை

இராமநாதன் நுண்கலைத்துறை மாணவிகள் வழங்கும்

இசை மாலை

மானிப்பாய் கலைக்கோயில் மாணவிகள் வழங்கும்

நாட்டியாஞ்சலி

இதனைத் தொடர்ந்து

கல்லூரி மாணவ மாணவிகள் கௌரவ அதிபர் திரு ஆ. கல்யாணசுந்தரேசன் அவர்களின் மேற்பார்வையின் கீழ் தயாரித்து அளிக்கும்

இளங்கலைஞர் திரு. வை. மா. அருட்சந்திரன் நெறியாள்கையில் உருவான

ஷேக்ஸ்பியரின்

## "மாவீரன் ஜூலியஸ்சீசர்"

நாடகம் அரங்கேற்றப்படும்.

இடம்:- மானிப்பாய் இந்துக்கல்லூரி

காலம்:- இன்று (13-03-93) சனிக்கிழமை இரவு 7.00 மணி

அன்பளிப்பு ரூபா 10 மட்டுமே!

★ குறித்த நேரத்திற்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி வணக்கம்.

ஈழத்து நாடகத் தந்தை அமரர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் ஞாபகார்த்த நாடகக் கல்லூரியினர் மேடையேற்றும் ''மாவீரன் ஜூலியஸ்சீசர்'' நாடகம் வெற்றிபெற கலையுலகின் சார்பிலும் எமது கல்லூரியின் சார்பிலும் வாழ்த்துக் கூறுகின்றோம்.

★ ★

அன்பளிப்பு:-

பட்டப் படிப்புகள் கல்லூரி,

148/1, ஸ்ரான்லி வீதி,

(சி-6191) யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 3ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.